உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்கார்ந்தால்தான் நான் அவரிடம் என்னவென்று கேட்கலாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் நீங்கள். எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவராகிய நீங்கள் அந்தப் பிரச்சினை குறித்து விளக்கம் வேண்டுமென்று கேட்டீர்கள். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் தெளிவான ஒரு விளக்கத்தை இந்த அவைக்குக் கொடுத்துவிட்டார். (குறுக்கீடுகள்) அதிலே விவாதம் ஒன்றும் இல்லை. (குறுக்கீடுகள்) அதில் ஒன்றும் விவாதம் இல்லை. (குறுக்கீடுகள்) அதில் விவாதம் இல்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், என்னவென்று சொல்லுங்கள். பேசுவது சர்ச்சைக்குரியவிதமாக இருந்தால், நான் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுவேன் என்பதையும் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். சொல்லுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்ச்சைக்குரியது இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். எனவே, இதுகுறித்து பணியில் இருக்கக்கூடிய உயர் நீதிமன்றத்தினுடைய நீதிபதி தலைமையில் இதற்கு ஒரு விசாரணை கமிஷனை வைக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை. அதை முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்கிறாரா என்பதைத்தான் நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவ்வளவுதான் உட்காருங்கள். உட்காருங்கள், நீங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உங்களுடைய கோரிக்கையைத்தானே சொன்னீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உங்களுடைய கோரிக்கையைத்தான் வைத்தீர்கள். அவ்வளவுதான். (குறுக்கீடுகள்)*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

4. அறிவிப்புகள்

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)–ன்கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் 2–வது கூட்டத்தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கின்றேன்:*

1. திரு. ஓ.கே. சின்னராஜ்
2. திரு. பி.எம். நரசிம்மன்
3. திரு. வி.வி. இராஜன் செல்லப்பா
4. திரு. S. செம்மலை
5. திரு. தங்க. தமிழ்ச்செல்வன்
6. திரு. P. வெற்றிவேல்

5. அரசினர் தீர்மானங்கள்

(அ) மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தீர்மானங்கள். குழுக்களுக்கான தேர்தல். மதிப்பீட்டுக் குழு. மதிப்பீட்டுக் குழுவிற்கு 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 195–ன்கீழ், 2016–2017 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.